DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023

Prosecution Witness – P.W. 24

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சந்திரமௌலி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Date | : | 18.02.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026.

(1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

18.02.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சென்னையில் உள்ள ரிலையன்ஸ் ஜியோ இன்போ காம் லிமடெட் நிறுவனத்தில் துணை பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு புதுச்சேரியில் மாநில நோடல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி காவல் நிலையம் ஆய்வாளர் அவர்களின் 11.08.2023 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் கன்னியாகுமரி

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் மின்னஞ்சலிலிருந்து எங்களுடைய அலுவலகத்திற்கு 14.08.2023 அன்று கிடைக்கப் பெற்றது. அதில் ஆரல்வாய்மொழி காவல் நிலைய குற்ற எண். 145/2023 சம்பந்தப்பட்ட இரண்டு ஜியோ மொபைல் எண்களான 6383811049 மற்றும் 9360310249 ஆகியவற்றின் வாடிக்கையாளர் விண்ணப்ப படிவம் மற்றும் 08.06.2023 முதல் 10.06.2023 வரையிலான Call Detail Records மற்றும் அதற்குண்டான பிரிவு 65 B இந்திய சாட்சிய சட்டத்தின்படி சான்றும் கேட்கப்பட்டிருந்தது. அதை பெற்று என்னுடைய அலுவலக கணினியிலிருந்து கேட்கப்பட்ட விவரங்களை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து, 16.08.2023 தேதியிட்ட என்னுடைய பதில் கடிதத்துடன் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். 6383811049 எண்ணின் Call Detail Records 29 பக்கங்கள் அனுப்பி வைத்தேன். 9360310249 எண்ணின் Call Detail Records 22 பக்கங்கள் அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் அனுப்பி வைத்த கடிதம்தான். **அந்த கடிதம் அ.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படுவது நான் அனுப்பி வைத்த Section 65 B Certificate தான். **அந்த Certificate அ.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படுவது 6383811049 மொபைல் எண்ணிற்கான வாடிக்கையாளர் விண்ணப்பபடிவத்தின் பிரிண்ட்அவுட். **அது விண்ணப்படிவம் அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படுவது 9360310249 மொபைல் எண்ணிற்கான வாடிக்கையாளர் விண்ணப்பபடிவத்தின் பிரிண்ட்அவுட். **அது விண்ணப்பபடிவம் அ.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படுவது நான் அனுப்பி வைத்த 6383811049 மொபைல் எண்ணிற்கான Call Detail Records. **அது அ.சா.ஆ. 24 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படுவது நான் அனுப்பி வைத்த 9360310249 மொபைல் எண்ணிற்கான Call Detail Records. **அது அ.சா.ஆ. 25 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**.

மொபைல் எண் 6383811049 என்ற எண்ணின் சந்தாதாரர் திரு. ஜார்ஜ் ஆன்றனி. அவருடைய தந்தை பெயர் திரு. ஏசுதாசன். அவருடைய முகவரி எண். 13/144, மேற்கு தெரு, கிறிஸ்து நகர், ஆரல்வாய்மொழி, தோவாளை, கன்னியாகுமரி - 629301. 21.06.2018 அன்று அந்த எண் Activate செய்யப்பட்டது.

மொபைல் எண் 9360310249 என்ற எண்ணின் சந்தாதாரர் திரு.சண்முகநாதன். அவருடைய தந்தை பெயர் திரு. குமார். அவருடைய முகவரி வில்லவிளை, ஆரல்வாய்மொழி, தோவாளை கன்னியாகுமரி - 629 301. 05.05.2019 அன்று அந்த எண் Activate செய்யப்பட்டது.

அ.சா.ஆ. 25 வரிசையில் பக்கம் 15 ல் 9360310249 என்ற எண்ணின் Call Detail Records படி 919787758201 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 20.05.23 மணிக்கு ஒரு அழைப்பு சென்றுள்ளது. இந்த அழைப்பு நேரம் 61 வினாடிகள்.

9360310249 என்ற எண்ணிலிருந்து 919787758201 என்ற எண்ணிற்கு அழைப்பு செல்லும்போது Tower Location P. Sandhkani SF No. 62/10, No. 11/113, East Street, Mission Compound, Aralvoimozhi, Tamilnadu. அந்த ஆரல்வாய்மொழியில் உள்ள P. Sandhkani என்பவரின் அந்த முகவரியில்தான் அந்த டவர் இருக்கிறது என்பதைதான் அந்த விவரம் குறிக்கிறது.

அ.சா.ஆ. 24 வரிசையில் பக்கம் 15 ல் 919677991886 என்ற எண்ணிலிருந்து Call Detail Records படி 6383811049 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 15.31.58 மணிக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பு நேரம் 75 வினாடிகள்.

அ.சா.ஆ. 24 வரிசையில் பக்கம் 15 ல் 919677991886 என்ற எண்ணிலிருந்து Call Detail Records படி 6383811049 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 15.52.10 மணிக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பு நேரம் 20 வினாடிகள்.

அ.சா.ஆ. 24 வரிசையில் பக்கம் 15 ல் 919677991886 என்ற எண்ணிலிருந்து Call Detail Records படி 6383811049 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 16.16.39 மணிக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பு நேரம் 42 வினாடிகள்.

அ.சா.ஆ. 24 வரிசையில் பக்கம் 15 ல் 919677991886 என்ற எண்ணிலிருந்து Call Detail Records படி 6383811049 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 16.39.12 மணிக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பு நேரம் 72

வினாடிகள்.

அ.சா.ஆ. 24 வரிசையில் பக்கம் 15 ல் 919677991886 என்ற எண்ணிலிருந்து Call Detail Records படி 6383811049 என்ற எண்ணிற்கு 09.06.2023 அன்று 17.11.06 மணிக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. இந்த அழைப்பு நேரம் 24 வினாடிகள்.

919677991886 என்ற எண்ணின் சந்தாதாரர் யார் என்று என்னிடம் தகவல் இல்லை. அந்த விவரம் என்னிடம் விசாரணையின்போதும் கேட்கப்படவில்லை. சம்மனிலும் கோரப்படவில்லை.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்) :-**

6383811049 என்ற எண்ணின் சந்தாதாரர் அ.சா.ஆ 22 விண்ணப்பத்தின்படி ஜார்ஜ் ஆன்றனி.

9360310249 என்ற எண்ணின் சந்தாதாரர் அ.சா.ஆ 22 விண்ணப்பத்தின்படி சண்முகநாதன்.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்) :-**

இந்த வழக்கின் ஆய்வாளர் எந்த தேதியில் என்னை விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

என்னை விசாரிக்கும்போது மாவட்ட காவல் காண்காணிப்பாளரின் மின்னஞ்சலிலிருந்து எனக்கு வேண்டுகோள் கடிதம் வந்தது என்று சொன்னேனா என்றால் குறிப்பாக என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

அ.சா.ஆ. 25 வரிசையான 9360310249 என்ற எண்ணின் Call Record Details ல் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். அ.சா.ஆ. 20 கடிதத்தில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அ.சா.ஆ. 25 வரிசையில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி என்னால் அ.சா.ஆ. 20 லிருந்து அ.சா.ஆ. 25 வரையான ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (3 வது எதிரி தரப்பில்)** :-

மேலே சொல்லப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.